S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்புத் திட்டம் செய்யப்படும், சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 326 19.05.2026 TUESDAY VAIKASI : 5 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 326 19.05.2026 செவ்வாய்கிழமை வைகாசி : 5 விலை : ரூ.5/-

## உணவுத் துறை செயலராக அமுதா நியமனம்

# "17 ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம்!"

சென்னை: மே.19-

தமிழகத்தில் வருவாய், ஊரக வளர்ச்சித் துறை செயலர்கள், சென்னை மாநகராட்சி ஆணையர் உட்பட 17 ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ணவுத் துறை செயலராக அமுதாவும், நகராட்சி நிர்வாகத் துறை செயலராக ககன் தீப் சிங் பேடியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் முதல்வர் விஜய் தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்றது முதல் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் தொடர்ந்து இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், இன்று 17 ஐஏஎஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளனர். இது தொடர்பாக தலைமைச் செயலர் எஸ்.சாய்குமார் வெளியிட்ட உத்தரவு:



ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி இப்போது நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறைக்கும், வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை செயலர் பி.அமுதா இப்போது கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கும், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் சத்யபிரத சாஹூ இப்போது நீர்வளத் துறைக்கும், போக்குவரத்து துறை செயலர் சுன்சோங்கம் ஜடக் சிரு இப்போது பொதுப் பணித் துறைக்கும் செயலராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுன்சோங்கம் ஜடக் சிரு இயற்கை வளங்கள் துறை செயலர் பொறுப்பையும் கூடுதலாக கவனிப்பார். தமிழ்நாடு கனிம வள நிறுவன இயக்குநர் அனில் மேஷ்ராம் இப்போது மின்துறை செயலராகவும், மறுவாழ்வு, வெளிநாடு வாழ் தமிழர்கள் நல ஆணையர் எம்.வள்ளலார் இப்போது போக்குவரத்து துறை செயலராகவும், கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலராக இருந்த கே.எஸ்.பழனிசாமி இப்போது வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வேளாண் துறை முன்னாள் செயலர் வி.தட்சிணாமூர்த்தி இப்போது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை செயலராகவும், திட்டம், வளர்ச்சித் துறை செயலர் சஜ் ஜன்சிங் ஆர் சவான் இப்போது இளைஞர் நலன், விளையாட்டுத் துறை செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிதித் துறை செலவினப் பிரிவு செயலர் பிரசாந்த் மு.வடநரே இப்போது ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ் துறை செயலராகவும், நிதித் துறை சிறப்பு செயலர் ஜி.கே. அருண்சுந்தர் தயாளன் இப்போது பதிவுத் துறை தலைவராகவும், முன்னாள் முதல்வரின் இணை செயலராக இருந்த ஜி.லட்சுமிபதி இப்போது நிதித் துறை இணை செயலராகவும், ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர் டி.ஆனந்த் இப்போது சென்னை குடிநீர் வாரிய மேலாண் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஏ.ஆர்.ராகுல்நாத் இப்போது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும (சிஎம்டிஏ) உறுப்பினர் செயலராகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண் இயக்குநர் ஜி.எஸ். சமீரன் இப்போது சென்னை மாநகராட்சி ஆணையராகவும், முன்னாள் துணை முதல்வரின் கூடுதல் செயலராக இருந்த எம்.ஆர்த்தி இப்போது பெண்கள் மேம்பாட்டு நிறுவன மேலாண் இயக்குநராகவும், பதிவுத் துறை தலைவராக இருந்த தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இப்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் நியமனம் எப்போது? : விஜய்க்கு வானதி கேள்வி

### திருச்செந்தூர் கோயில் வசூல் வேட்டை குறித்து வேதனை

சென்னை: மே.19-

"திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் இன்று வசூல் வேட்டையால் புனிதத்தை இழந்து வருவது வேதனை அளிக்கிறது. இந்து சமய அறநிலையத் துறைக்கென்று அமைச்சரை நியமிக்காமல் காலம் தாழ்த்தி வரும் தமிழக முதல்வர் விஜய், விரைவில் துறை அமைச்சரை நியமனம் செய்து கோயில்களில் இதுபோன்று நடக்கும் சம்பவங்களை தடுத்து நிறுத்த வேண்டும்" என பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் வெற்றியின் அம்சமாகக் கருதப்படும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் இன்று வசூல் வேட்டையால் புனிதத்தை இழந்து வருவது வேதனையளிக்கிறது. மன நிம்மதிக்காகவும், வேண்டுதல்களுக்காகவும், நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவும் வருகை தரும் பக்தர்களிடத்தில் விரைவில் சுவாமி தரிசனத்திற்கு அழைத்துச் செல்கிறேன் என்று கூறி சில நபர்கள் வசூல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இவர்களின் ஆசை வார்த்தைகளில் சிக்கும் பக்தர்கள் ஒரு நபருக்கு 500 முதல் 1000 வரை கொடுத்து ஏமாந்து வருகின்றனர். இவ்வாறு தொடர்ச்சியாக இதுபோன்ற புகார்கள் வந்தவண்ணம் இருப்பதை கோயில் நிர்வாகம் அறியவில்லையா அல்லது அறிந்தும் கமிஷன் போய்விடும் என்று கண்டு கொள்ளாமல் இருக்கிறதா என்று தெரியவில்லை. மேலும் சில நாட்களுக்கு முன்னர் பக்தர்கள் கேட்டை உடைத்துக் கொண்டு ஆலயத்தினுள் நுழைந்த சம்பவமும் அரங்கேறியிருக்கிறது.

இதுவரை இந்து சமய அறநிலையத் துறைக்கென்று அமைச்சரை நியமிக்காமல் காலம் தாழ்த்தி வரும் தமிழக முதல்வர் விஜய், விரைவில் துறை அமைச்சரை நியமனம் செய்து இந்து சமய அறநிலையத் துறையில் கோயில்களில் இதுபோன்று நடக்கும் சம்பவங்களை தடுத்து பக்தர்கள் மன நிம்மதியுடன் சுவாமி தரிசனம் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்

# திருப்பூர் கலெக்டர் ஆபீஸில் குடிநீர் அவலம்...

## முதல்வர் விஜய்க்கு பறந்தது தமிழ்நாடு பிரஸ் கிளப்பின் அவசரக் கடிதம்!








திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்ட 'அக்வா கார்டு' குடிநீர் இயந்திரங்கள் அனைத்தும் கடந்த ஓராண்டாகப் பழுதடைந்து, துருப்பிடித்துக் கிடக்கும் அவலத்தை, பலமுறை செய்தியாளர்கள் நேரடியாக அலுவலர்களிடம் தெரிவித்தும் பயனற்று போயிருந்தது, நாளிதழ்களும் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியிருந்தது.

அடிப்படை வசதிகூட இல்லாமல் மாவட்டத்தின் முதன்மை அலுவலகமே முடங்கிக் கிடக்கும் இந்த விவகாரம், தற்போது தமிழக அரசிடம் நேரடியாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**முதல்வர் கவனத்திற்குச் சென்ற அவலம்!**

வெளியான களச் செய்தியின் தீவிரத்தை உணர்ந்து, தமிழ்நாடு பிரஸ் கிளப் மாநில பொதுச் செயலாளர் பால்பாண்டியன், தமிழக முதலமைச்சர் விஜய் அவர்களுக்குப் பிரத்யேகமாக அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள்:

**சாமானியர்களின் தாகம்**

தனது சொந்த அலுவலகத்திலேயே அடிப்படை வசதியான குடிநீரைச் சீரமைக்க முடியாத மாவட்ட நிர்வாகம், ஒட்டுமொத்த மாவட்ட மக்களுக்கு எத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்பதே இப்பகுதி மக்களின் காரசாரமான கேள்வியாக உள்ளது.

குடிநீர் என்பது ஆடம்பர வசதி அல்ல; அது மனித உயிர்களுக்கான அடிப்படை உரிமை. மாவட்டத்தின் மிக முக்கியப் புள்ளிகள் வந்து செல்லும் கோட்டை போன்ற இந்த அலுவலகத்திலேயே சாமானியர்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால், மாவட்டத்தின் கடைக்கோடி கிராமங்களில் வாழும் மக்களின் நிலை என்ன? அங்கெல்லாம் இன்னும் எத்தனை எத்தனையோ அடிப்படைத் தேவைகளும், வசதிகளும் கிடைக்காமல் மக்கள் அன்றாடம் அவதிப்பட்டு வருகிறார்கள் என்பது அந்த 'கடவுளுக்குத்தான் வெளிச்சம்!'

திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு கிராமப் புறங்களில் இருந்து தினசரி நூற்றுக்கணக்கான ஏழை எளிய மக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளிக்க ஆட்சியர் அலுவலகம் வருகின்றனர். அவர்களுக்குக் குறைந்தபட்ச அத்தியாவசியத் தேவையான குடிநீர் கூட வழங்கப்படாமல் இருப்பது மனிதநேயமற்ற செயல்.

**அலட்சியத்தின் உச்சம்**

கோடிக்கணக்கில் நிதி புழங்கும் ஒரு மாவட்டத்தின் தலைமை அலுவலகத்தில், ஆர்.ஓ (ஸி.ளி) இயந்திரங்களை ஓராண்டாகப் பழுதுபார்க்காமல் அதிகாரிகள் அலட்சியம் காட்டியது ஏன்?

**உடனடித் தலையீடு**

இந்த விவகாரத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, பழுதடைந்த இயந்திரங்களைச் சீரமைக்க உத்தரவிட வேண்டும். மேலும், இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செய்தியாளர்களின் உரிமைகளுக்காகவும், மக்களின் பிரதானப் பிரச்சினைகளுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் தமிழ்நாடு பிரஸ் கிளப்பின் மாநில பொதுச் செயலாளர் பால்பாண்டியன், நேரடியாக இந்த விவகாரத்தில் களம் இறங்கி முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

முதலமைச்சரின் தனிப்பிரிவு இந்தக் கடிதத்தை ஆய்வு செய்து, உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்க மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிடுவார் என கோட்டை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**வியூகப் பார்வை**

ஊடகங்களின் சாட்டையடிச் செய்தியும், பிரஸ் கிளப்பின் அதிகாரப்பூர்வக் கடிதமும் இணைந்துள்ள நிலையில், 'அரசு இயந்திரத்தின்' துருவை முதலமைச்சர் விஜய் அதிரடியாக நீக்குவாரா? திருப்பூரின் தாகம் தீருமா? பொறுத்திருந்து பார்ப்போம்!



## மனுக்கள் மீது உடனே நடவடிக்கை எடுங்க!”
## தென்காசி அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் கெடு

தென்காசி மே,19-
தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.*குவிந்த 347 மனுக்கள்:*இக்கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் குடிநீர், சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கோரி மொத்தம் 347 மனுக்கள் பெறப்பட்டன .*கலெக்டரின் அதிரடி உத்தரவு:*பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்தவையா என்பதை உடனுக்குடன் கள விசாரணை செய்து, அவற்றின் மீது மிக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மனுதாரர்களுக்கு உரிய பதில்களைத் தாமதமின்றி வழங்க வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் அதிரடியாக அறிவுறுத்தினார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, மாவட்ட வழங்கல் அலுவலர் பால்துரை, பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்துராமலிங்கம் உட்பட அனைத்துத் துறை அரசு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



■ மாற்றுத்திறனாளிகளின் சுதந்திரமான நடமாட்டத்தை உறுதி செய்யும் வகையில், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளை வழங்கினார்.



## வேத மந்திரங்கள் முழங்க...அழகாபுரி மந்தையம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் கோலாகலம்

அலங்காநல்லூர் மே 19-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அழகாபுரி கிராமத்தில் எழுந்தருளியுள்ள புகழ்பெற்ற ஸ்ரீ மந்தையம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. மங்கல இசை முழங்க மகா கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், தன்வந்திரி யாகம் மற்றும் நவகிரக ஹோமங்கள் பக்திப் பரவசத்துடன் நடத்தப்பட்டன.இதனைத் தொடர்ந்து, பல்வேறு புனிதத் தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புண்ணிய நதிகளின் புனித நீர் அடங்கிய குடங்கள் கோவிலைச் சுற்றி வலம் வரச் செய்யப்பட்டன. பின்னர் வேத மந்திரங்கள் மற்றும் மேள தாளங்கள் முழங்க, வானத்தில் கருடன் வட்டமிட, கோபுர உச்சிக்குக் கொண்டு செல்லப்பட்ட புனித நீர் கும்ப கலசத்தில் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். கோவிலுக்கு வந்த பக்தர்களுக்குப் பூஜை மலர்கள், பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை அழகாபுரி கிராம பொதுமக்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## வெளியேறும் அந்நிய முதலீடுகள் - வரலாற்றுச் சரிவில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு

புதுடெல்லி:மே 19-
இன்றைய வர்த்தகத்தின் தொடக்கத்தில் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 96.20 என்ற வரலாற்றுச் சரிவைச் சந்தித்துள்ளது. வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களின் தொடர் வெளியேற்றமே இதற்குக் காரணம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சர்வதேச அளவிலான பிரச்சினைகள் மற்றும் உள்நாட்டுச் சவால்கள் காரணமாக டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு நிலையற்றதாக மாறி வருகிறது. கடந்த ஐந்து வர்த்தக அமர்வுகளில் ரூபாய் மதிப்பு தொடர்ந்து சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ரூபாயின் மதிப்பு 95.84 முதல் 96.14 வரை ஊசலாடிய நிலையில் வர்த்தக முடிவில் 95.97 என்பதாக நிலைபெற்றது. இதுவும் ஒரு வரலாற்றுச்சரிவாகவே அமைந்தது.இந்நிலையில் இன்று வர்த்தகத்தின் தொடக்கத்தில் ரூபாயின் மதிப்பு 96.20 என்ற மற்றுமொரு வரலாற்றுச் சரிவைக் கண்டது. ரூபாயின் மதிப்பு இன்று 95.85 முதல் 96.30 வரை ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கும் என ஆய்வாளர்கள் கணிக்கின்றனர்.ரூபாய் மதிப்பின் சரிவு 96.30 முதல் 96.40க்குள் இருக்கும்படி தாக்குப்பிடிப்பதற்கான உடனடி தடை நிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வரம்புக்கு மேல் ரூபாயின் மதிப்பு சரிந்தால் அது 96.50 என்ற நிலையை நோக்கி தள்ளக்கூடும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.சரிவுக்குக் காரணம் என்ன?வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களின் தொடர் வெளியேற்றமே ரூபாய் சரிவுக்கு முக்கியக் காரணமாகத் திகழ்கிறது. தற்போதைய மே மாதத்தில் இதுவரை இந்திய பங்குச் சந்தையில் இருந்து சுமார் ரூ.27,000 கோடி வெளிநாட்டு நிறுவன முதலீடுகள் வெளியேறி உள்ளன. இந்த ஆண்டில் இதுவரை ரூ.2.2 லட்சம் கோடி வெளியேறி உள்ளது. கடந்த ஆண்டு முழுவதும் வெளியேறிய வெளிநாட்டு நிறுவன முதலீடு ரூ.1.66 லட்சம் கோடியாக இருந்த நிலையில், இந்த ஆண்டில் இதற்குள்ளாகவே அதை மிஞ்சிவிட்டது.கச்சா எண்ணெய் விலையின் அதிரடி உயர்வு ரூபாய் சரிவுக்கு முக்கிய காரணியாக உள்ளது. பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை ஒரு பேரல் 111 டாலரை தாண்டிவிட்டது. இதனால், இந்தியாவின் இறக்குமதிச் செலவு அதிகரித்து, பணவீக்கம் குறித்த அச்சங்களைத் தூண்டுகிறது

## வறுமையிலும் சாதித்த பிள்ளைகளின் கரம் பிடிக்கும் திசையன்விளை ‘பாரி வள்ளல்’ கட்டிட பொறியாளர்கள் சங்கத் தலைவர் ஆனந்தராஜ்



திசையன்விளை மே,19-
"கொடுத்தே சிவந்த கரம்" என்ற சங்க காலப் பாரி வள்ளலின் கொடைப் பண்பிற்கு இலக்கணமாக, இன்றைய நவீனக் காலத்தில் தமிழ்வழி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தன் சொந்தப் பணத்தை வாரி வழங்கி வருகிறார் திசையன்விளை கட்டிட பொறியாளர்கள் சங்கத் தலைவர் ஆனந்தராஜ் .*மாணவர்களின் இல்லம் தேடிச் சென்று:*
நடந்து முடிந்த 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில், திசையன்விளை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமப்புறப் பள்ளிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துச் சாதனை படைத்த 27 மாணவ, மாணவிகளின் வீடுகளுக்கே நேரடியாகத் தேடிச் சென்று அவர்களைக் கௌரவித்துள்ளார். வறுமை மற்றும் கிராமப்புறச் சூழலிலும் தமிழ்வழிக் கல்வியில் சாதித்த பிள்ளைகளுக்குச் சந்தன மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து, அவர்களின் உயர்கல்விக் கனவு கலைந்துவிடக் கூடாது என்பதற்காகத் தலா ரூபாய் 10,000 ரொக்கப்பரிசினை அள்ளி வழங்கியுள்ளார்.*சுயலமற்ற உன்னதச் சேவை:*வெறும் விளம்பரத்திற்காக விழா நடத்திக் கூப்பிடாமல், சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு கிராமத்தின் வீதிகளிலும் இறங்கி, ஏழை எளிய மாணவர்களின் குடிசை மற்றும் ஓட்டு வீடுகளின் கதவுகளைத் தட்டி, இந்த நிதியுதவியைச் சங்கத் தலைவர் ஆனந்தராஜ் வழங்கிய விதம் இப்பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டைத் தொடர்ந்து இந்தாண்டும் தனது சமூகப்பணியை மேலும் பல கிராமங்களுக்கு விரிவுபடுத்தி, கல்வித் துறையில் திசையன்விளையின் 'இன்றைய பாரி வள்ளலாக' உயர்ந்து நிற்கிறார் கட்டிட பொறியாளர்கள் சங்கத் தலைவர் ஆனந்தராஜ் .*சக்கரவியூகம் வாய்ஸ்:*சங்க காலத்தில் பறம்பு மலையை ஆண்ட பாரி வள்ளல், முல்லைக்குத் தேர்க் கொடுத்தார். இந்த 2026ல் திசையன்விளையைச் சேர்ந்த பொறியாளர் ஆனந்தராஜ், வறுமையில் வாடும் கிராமப்புறத் தமிழ்வழிக் கல்வி மாணவர்களின் உயர்கல்வித் தேரை இழுக்கத் தனது கொடைக்கரத்தை நீட்டியுள்ளார். சாதனை படைத்த பிள்ளைகளைத் தேடிப் போய், அவர்களின் வாசல் படியில் நின்று வாழ்த்தி, ₹10,000 பணமுடிப்பு வழங்கிய இவரை 'இன்றைய பாரி வள்ளல்' என்று அழைப்பது மிகப்பொருத்தமானது. கல்விச் சேவையில் சக்கரவியூகம் இவரை மனதார வாழ்த்திப் போற்றுகிறது!



■ பிளஸ் டூ பொதுத் தேர்வில் மாநில அளவில் இரண்டாம் இடமும், மாவட்ட அளவில் முதலிடமும் பெற்ற விஎஸ்ஆர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி காவியாவுக்கு, திசையன்விளை அருகே உள்ள அழகிவிளை சஞ்சீவ பதியை சார்ந்த அன்புக் கொடிமக்கள் சார்பாக ரூபாய் 35 ஆயிரம் மதிப்புள்ள செல்போன் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




## நீட் வினாத்தாள் கசிவு: மறுதேர்வு மட்டும்தான் தீர்வா?

சென்னை, மே 19-
அண்மையில் நடந்த நீட் மருத்துவ (இளநிலை) நுழைவுத் தேர்வில் முறைகேடு நடந்ததாகக் கண்டறியப்பட்டதை அடுத்து, தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும் ஜூன் 21 அன்று மறுதேர்வு நடத்தப்படும் என்றும் தேசியத் தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்துள்ளது. நீட் தொடர்பான சர்ச்சைகளுக்குத் தீர்வு காண வேண்டிய கட்டாயத்தை இவ்விவகாரம் உருவாக்கி இருக்கிறது.

நாடு முழுவதும் மே 3 அன்று நடந்த நீட் தேர்வில் ஏறக்குறைய 22.8 லட்சம் மாணவர்கள் பங்கேற்றனர். தேர்வு நடப்பதற்கு இரண்டு வாரங்கள் முன்னதாகவே, ராஜஸ்தானின் சீகர் மாவட்டத்தில் வினாத்தாள் கசிந்ததாகச் செய்திகள் வெளியாகின.

முதலில் இத்தகவலை மறுத்த என்டிஏ, தேர்வை ரத்துசெய்வதாக மே 12 அன்று தெரிவித்தது. இவ்விவகாரம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்த உத்தரவிட்டது மத்திய அரசு. இதுவரை 5 பேர் கைதாகியிருக்கின்றனர்.

ஏற்கெனவே, 2024இல் இதே போன்று வினாத்தாள் கசிவு விவகாரம் சர்ச்சையானது. அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள அமைக்கப்பட்ட கே.ராதாகிருஷ்ணன் குழு 101 பரிந்துரைகளை அரசிடம் சமர்ப்பித்தது. என்டிஏ மறுசீரமைப்பு, பல கட்ட நுழைவுத்தேர்வு உள்ளிட்ட அம்சங்கள் அதில் இடம்பெற்றிருந்தன.

ராஜஸ்தானில் கண்டறியப்பட்டுள்ள வினாத்தாள் கசிவு விவகாரம், அந்தப் பரிந்துரைகள் எந்த அளவுக்குச் செயல்பாட்டுக்கு வந்துள்ளன என்னும் கேள்வியை எழுப்புகிறது. தூக்கம், ஓய்வு, கேளிக்கையைப் புறந்தள்ளிவிட்டு, பல மாணவர்கள் நீட் தேர்வை எதிர்கொள்ளப் பயிற்சியெடுத்து வருகின்றனர்.

## சர்வதேச விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடும் இலங்கை




கொழும்பு:மே,19-
ஹம்பாந்தோட்டா துறைமுகம் அருகே அமைந்துள்ள மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை (விஸிமிகி) நீண்டகால குத்தகை மற்றும் நிர்வாகத்திற்காக உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு வழங்க இலங்கை அரசு முன்வந்துள்ளது.

மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்து நடத்த உள்நாட்டு மற்றும் சர்வதசே முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்து உள்ளது. கடந்த 2013ஆம் ஆண்டு சீன வங்கியிடமிருந்து சுமார் 209 மில்லியன் அமெரிக்க டாலர் கடனாக பெற்று துவக்கப்பட்ட இந்த விஸிமிகி விமான நிலையம், பல ஆண்டுகளாகவே பயன்பாடற்ற நிலையில் இருந்து வருகிறது.

2013ஆம் ஆண்டில் சீன நிதியுதவியுடன் கட்டப்பட்ட மற்றும் சீனக் கட்டுப்பாட்டில் உள்ள ஹம்பாந்தோட்டா துறைமுகத்திற்கு அருகில் அமைந்திருப்பதுமான இந்த விமான நிலையம், இந்தியாவால் மிக உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. MRIA திறக்கப்பட்டதிலிருந்து வணிகப் போக்குவரத்தை ஈர்ப்பதில் சிரமப்பட்டு வருகிறது. அதன் செயல்பாடுகள், தளவாடங்கள் மற்றும் தொழில் துறை உள்கட்டமைப்பை மேம்படுத்தவே 30 ஆண்டு கால குத்தகை மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசு அழைப்பு விதித்துள்ளது. முழுமையாகப் பயன்படுத்தப்படாத இந்த சர்வதேச விமான நிலையத்தை ஒரு துடிப்பான விமானப் போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கும், இதன் மூலம் லாபத்தை ஈட்டவும் இலங்கை இந்த முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.மேலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடமிருந்து ஜூன் 9ஆம் தேதிக்குள் விருப்ப வெளிப்பாடுகளை (Expressions of Interest - EOI) இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. இலங்கை தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 250 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த சர்வதேச விமான நிலையம், ஒரு பிரம்மாண்டமான முனையக் கட்டிடம் மற்றும் 3,500 மீட்டர் நீளமுள்ள ஓடுபாதை ஆகியவற்றைக் கொண்டிருந்த போதிலும், வணிக ரீதியாக லாபகரமான நிலையை அடையத் தேவையான பயணிகள் போக்குவரத்தையும் விமான நிறுவனங்களின் ஒப்பந்தங்களையும் ஈர்க்க தவறியது குறிப்பிடத்தக்கது

## ஸ்சென்னை அம்பத்தூரில் 500 போதை மாத்திரைகள் பறிமுதல்

சென்னை:மே 19-
அம்பத்தூரில் 500 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டது. இதில் கேசவன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக வந்த தகவலையடுத்து போலீசார் நடவடிக்கை எடுத்தனர். 500 போதை மாத்திரைகள் மற்றும் 2 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து அம்பத்தூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

## கேரளாவில் ஜூன் 15 முதல் பெண்களுக்கு அரசு பேருந்துகளில் இலவச பயணம்



திருவனந்தபுரம்:மே,19-
கேரள முதல்வராக பதவியேற்றுள்ள வி.டி.சதீசன், ஜூன் 15ம் தேதி முதல் அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார். முதல்வரான பிறகு அவர் இதற்கான கோப்பில் முதல் கையெழுத்திட்டுள்ளார். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றதை அடுத்து, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான வி.டி.சதீசன் இன்று முதல்வராக பதவியேற்றார். அவருடன் 20 அமைச்சர்கள் பதவியேற்றனர். இதையடுத்து, தலைமைச் செயலகம் சென்று பொறுப்பேற்றுக்கொண்ட வி.டி.சதீசன், தனது முதல் அமைச்சரவையைக் கூட்டினார். அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்த கோப்புகளில் அவர் கையெழுத்திடார்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் வி.டி.சதீசன், “தேர்தலின்போது நாங்கள் ஐந்து முக்கிய வாக்குறுதிகளை அளித்தோம். அதில் 2 முக்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட உள்ளன. ஒன்று, பெண்களுக்கான இலவச பேருந்து பயணம். வரும் ஜூன் 15ம் தேதி முதல் கேரள அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்க முடியும்.இரண்டாவது, வயதானவர்களுக்காக தனி துறையை நாங்கள் உருவாக்கப் போகிறோம். இந்தியாவில் இது முதலாவதாக இருக்கும். வயதானவர்கள் எவ்வாறு பராமரிக்கப்படுகிறார்கள் என்பதுதான் ஒரு நாகரிக சமூகத்தின் முக்கிய அளவுகோல். இதை கருத்தில் கொண்டு ஒரு சிறந்த நாகரிக சமூகமாக கேரளாவை மாற்ற நாங்கள் கனவு காண்கிறோம். வயதானவர்களின் நலன்களை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை நாங்கள் கொண்டு வர உள்ளோம். இதற்காக தனி துறையை நாங்கள் ஏற்படுத்த இருக்கிறோம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஊதிய உயர்வு கோரி ஆஷா பணியாளர்கள் நீண்டகாலமாக போராடினார்கள். அப்போது நாங்கள், அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக வாக்குறுதி அளித்தோம். அதன்படி, தற்போது அவர்களுக்கான மாத ஊதியத்தில் ரூ.3,000 உயர்த்தப்படுகிறது. அங்கன்வாடி பணியாளர்களுக்கு ரூ.1,000, பள்ளிகளில் சமையல் பணியாளர்களுக்கு ரூ.1,000, ப்ரீஸ்கூல் ஆசிரியர்களுக்கு ரூ.1,000, ஆயாக்களுக்கு ரூ.1,000 மாத ஊதியம் வழங்கப்படும்.கேரள சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட ஆளுநரிடம் நாங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளோம். மே 21ம் தேதி தொடங்க உள்ள சிறப்புக் கூட்டத் தொடரில் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்பார்கள், மே 22ம் தேதி சபாநாயகர் தேர்தல் நடைபெறும்” என தெரிவித்தார்.

# மும்மொழி திட்டத்தை தமிழக அரசு ஏற்க கூடாது: வைகோ வலியுறுத்தல்



தஞ்சாவூர்: மே.19-

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தஞ்சாவூரில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது: சமூக நீதி, மதச்சார்பின்மை, ஜனநாயகம், பெண்கள் பாதுகாப்பு, தமிழக வாழ்வாதாரங்களை காக்கும் கடமை இவற்றில் எள்ளளவும் பிசகாமல் முதல்வர் விஜய் ஆட்சியை நடத்த வேண்டும்.

மத்திய அரசின் பி.எம். திட்டத்தையோ, மும்மொழி திட்டத்தையோ முந்தைய திமுக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நிலைப்பாட்டை தான் இந்த அரசும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். நீட் தேர்வு நிரந்தரமாக ரத்து செய்யப்பட வேண்டும்.

கேள்வித்தாள் வெளியான சம்பவத்தால், தேர்வு எழுதிய அனைவரும் மிகுந்த வருத்தத்துக்கு ஆளாகி உள்ளனர். இதற்கு பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தை ஆளும் பொய்க்கால் குதிரை அரசு சட்டம் ஒழுங்கை காக்க வேண்டும்: பழனிசாமி



சென்னை::மே,19-

'ஆட்சி மாறினாலும், காட்சிகள் மாறவில்லை என்பதுபோல் இந்த காவல் துறை தற்போது சரியான மேய்ப்பன் இல்லாமல் தறிகெட்டு ஓடுகிறதோ என்ற சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளது. தமிழகத்தை ஆளும் பொய்க்கால் குதிரை அரசு சட்டம் ஒழுங்கை காக்க வலியுறுத்துகிறேன்' என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சென்னை முடிச்சூர், வரதராஜபுரத்தைச் சேர்ந்த பரத் மற்றும் சீனு என்ற கானா பாடகர்கள் துக்க நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு படப்பையில், நண்பர் வீட்டில் தங்கியிருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த ஆறு பேர் கும்பல் இருவரையும் கொடூர ஆயுதங்களால் குத்தி படுகொலை செய்துவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.ஆட்சி மாறினாலும், காட்சிகள் மாறவில்லை என்பதுபோல் இந்த காவல்துறை தற்போது சரியான மேய்ப்பன் இல்லாமல் தறிகெட்டு ஓடுகிறதோ என்ற சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளது. தமிழகத்தை ஆளும் பொய்க்கால் குதிரை அரசு இரண்டு இளைஞர்களை வெட்டிக் கொன்றுள்ள போதை ஆசாமிகளை உடனடியாக கண்டுபிடித்து சட்டம் ஒழுங்கை காக்க வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்

# மே 20ல் பத்தாம் வகுப்பு ரிசல்ட்; ஜூன் 1ல் பள்ளிகள் திறப்பு அமைச்சர் ராஜ்மோகன் தகவல்



சென்னை:மே,19-

"மே 20ஆம் தேதி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாகும். 1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஜூன் 4ஆம் தேதியும், 4 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஜூன் 1ஆம் தேதியும் பள்ளிகள் திறக்கப்படும்" என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.சென்னை தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளுடனான சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்கள் அமைச்சர் ராஜ்மோகன் கூறியது: " கோடை விடுமுறை முடிந்து 1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஜூன் 4 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும். 4 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஜூன் 1 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும். ஏற்கெனவே திட்டமிட்டபடி மே 20ஆம் தேதி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாகும்.

1 முதல் 3ஆம் வகுப்பு வரை இந்த ஆண்டு புதிய பாடத்திட்டம் அறிமுகம் ஆகிறது. ஜூன் 1 முதல் புதிய பாடத்திட்டம் தொடர்பாக தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்" எனத் தெரிவித்தார்.இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, புதிய பாடத் திட்டத்தின்படி வடிவமைக்கப்பட்ட புத்தகங்களை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்

# ம.பி.யில் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலில் தீ விபத்து நடந்தது என்ன?

போபால்:மே,19-

மத்திய பிரதேசத்தில் திருவனந்தபுரம் டெல்லி ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. இதில் 68 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் இருந்து டெல்லியின் ஹஸ்ரத் நிஜாமுதீன் ரயில் நிலையத்துக்கு ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில் கடந்த 15ம் தேதி இரவு 7.15 மணிக்கு புறப்பட்டது. கேரளா, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களைக் கடந்து சென்ற ரயில், நேற்று அதிகாலை 3.45 மணிக்கு மத்திய பிரதேச மாநிலத்தின் ரத்லம் நகரில் இருந்து புறப்பட்டது.லூனி ரிச்சா விக்ரம்கர் அலோட் பகுதிகளுக்கு இடையே அதிகாலை 5.15 மணிக்கு ரயில் வந்தபோது பி1 பெட்டியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. ரயில் பெட்டி தீப்பிடித்து எரிவதை பார்த்த கார்டு உடனடியாக ஓட்டுநர்களுக்கு தகவல் கொடுத்தார். உடனடியாக ரயில் நிறுத்தப்பட்டது. ரயிலில் இருந்த ஆர்பிஎப் போலீஸார் விரைந்து செயல்பட்டு பி1 பெட்டியில் இருந்த 68 பயணிகளை 15 நிமிடங்களுக்குள் கீழே இறக்கினர். விரைவாக செயல்பட்டதால் பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

அடுத்த 10 நிமிடங்களுக்குள் பி1 பெட்டி முழுவதும் கொழுந்துவிட்டு எரிந்தது. சிறிது நேரத்தில், அருகில் உள்ள சரக்குப் பெட்டிக்கும் தீ பரவியது. மத்திய பிரதேச தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து சில மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இதனால் இந்த வழித்தடத்தில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதுகுறித்து ரயில்வே வட்டாரங்கள் கூறும்போது, "ரயில் கார்டு, ஓட்டுநர்கள், ஆர்பிஎப் போலீஸார் விரைந்து செயல்பட்டதால் உயிரிழப்பு தடுக்கப்பட்டுள்ளது. 68 பயணிகளும் பத்திரமாக மீட்கப்பட்டு உள்ளனர். மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருப்பது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக உயர்நிலை விசாரணை நடத்தப்படும்" என்று தெரிவித்துள்ளன.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# தலைமை நீதிபதி கருத்துக்கு 'பகடி' எதிர்வினை 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி'யில் இணைந்த மஹுவா, கீர்த்தி ஆசாத்



புதுடெல்லி:மே,19-

நாட்டின் வேலையில்லாத இளைஞர்களை கரப்பான்பூச்சிகள் என உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் குறிப்பிட்டதாகக் கூறப்படும் நிலையில், அதை பகடி செய்யும் விதமாக உருவாக்கப்பட்ட 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி' என்ற எக்ஸ் பக்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் எம்பிக்களான மஹுவா மொய்த்ரா, கீர்த்தி ஆசாத் ஆகியோர் இணைந்துள்ளனர். கடந்த வாரம் உச்ச நீதிமன்றத்தில் நடந்த ஒரு விசாரணையின்போது பேசிய தலைமை நீதிபதி சூர்ய காந்த், 'கரப்பான்பூச்சிகளைப் போன்ற இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த வேலையும் இருப்பதில்லை; எந்த தொழிலும் செய்வதில்லை. அவர்களில் சிலர் ஊடகவியலாளர்களாகவும், சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்களாகவும், தகவல் அறியும் உரிமை ஆர்வலர்களாகவும் மாறி அனைவரையும் தாக்க தொடங்குகிறார்கள்' என கூறி இருந்தார்.

சூர்ய காந்தின் இந்தக் கருத்துக்கு எதிராக சமூக ஊடங்களில் பலரும் கருத்துகளைப் பதிவிட்டு வந்தனர். இந்நிலையில், தலைமை நீதிபதியின் கருத்துக்கு எதிர்வினையாற்றும் நோக்கில், நையாண்டித்தனமாக 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி' என்ற பெயரில் ஒரு எக்ஸ் பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.இந்தப் பக்கத்தின் சுய விவரம், தலைமை நீதிபதி கூறியதை கேலி செய்வது போல் உள்ளது. அந்தக் கட்சி தன்னை, இளைஞர்களின், இளைஞர்களால், இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு அரசியல் முன்னணி என்றும், மதச்சார்பற்ற, சோசலிச, ஜனநாயக சோம்பேறிகளின் கட்சி என்றும் அடையாளப்படுத்திக் கொண்டுள்ளது.'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி' யில் உறுப்பினராக இணைய தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. வேலையற்றவராக இருக்க வேண்டும், சோம்பேறியாக இருக்க வேண்டும், தொடர்ந்து இணையத்தில் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 11 மணி நேரம் இருக்க வேண்டும். மற்றபடி, சாதி, மதம், பாலினம் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி'யின் எக்ஸ் பக்கம் வேகமாக பிரபலமடைந்து, 24 மணி நேரத்துக்குள் 18,000க்கும் மேற்பட்ட பின்தொடர்பவர்களைப் பெற்றுள்ளது. திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் எம்பிக்கள் மஹுவா மொய்த்ரா, கீர்த்தி ஆசாத் ஆகியோர் இந்த எக்ஸ் பக்கத்தில் இணைந்துள்ளனர்.சூர்ய காந்த் விளக்கம்:தான் கூறிய 'கரப்பான்பூச்சி' கருத்து தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் விளக்கம் அளித்துள்ளார். தனது கருத்துக்கள் நாட்டின் இளைஞர்களை குறிக்கவில்லை என்றும், மாறாக போலிச் சான்றிதழ்களை பயன்படுத்துவர்களை குறிப்பிட்டே கூறப்பட்டதாகவும் விளக்கம் அளித்துள்ளார்.

ஊடகங்களின் ஒரு பிரிவு தனது கருத்துகளை தவறாக மேற்கொள்காட்டியிருப்பதைப் பார்த்தபோது வேதனையாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்."போலி பட்டங்களின் உதவியுடன் வழக்கறிஞர் தொழில் போன்ற தொழில்களில் நுழைந்தவர்களைத்தான் நான் குறிப்பாக விமர்சித்தேன். இதேபோன்ற நபர்கள் ஊடகங்கள், சமூக ஊடகங்கள் உள்பட பல உன்னத தொழில்களிலும் ஊடுருவியுள்ளனர். அவர்கள் ஒட்டுண்ணி போன்றவர்கள்" என சூர்ய காந்த் தெரிவித்துள்ளார்.

# "தமிழகத்தின் சூழல் வேறு" முதல்வர் விஜய் உடனான ஒப்பீடு குறித்து பவன் கல்யாண் கருத்து

மங்களகிரி:மே,19-

தனது அரசியல் பயணத்தை தமிழக முதல்வர் விஜய்யின் அரசியல் எழுச்சியோடு ஒப்பிடுவது குறித்து ஆந்திர மாநிலத்தின் துணை முதல்வர் பவன் கல்யாண் கருத்து தெரிவித்துள்ளார். ஜன சேனா கட்சி தொண்டர்கள் மத்தியில் இது தொடர்பாக அவர் பேசுகையில், "தமிழகத்தின் முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்னர் நாம் ஏன் ஆந்திராவில் கூட்டணி அமைத்தோம் என்ற கேள்வியை நம் ஆதரவாளர்கள் எழுப்பி வருகின்றனர். ஆனால், ஆந்திராவுடன் ஒப்பிடும்போது தமிழகத்தின் அரசியல் சூழல் என்பது வேறுபட்டு உள்ளது.சமூக மாற்றம் வேண்டுமென்ற நோக்கத்துடன் அரசியல் கட்சியை நான் தொடங்கினேன். முன்னாள் முதல்வர் என்டிஆரின் அரசியல் பயணத்தை பார்த்துள்ளேன். அதேநேரத்தில் நக்சலிச கொள்கைக்காக இளைஞர்கள் உயிர் தியாகம் செய்ததையும் பார்த்துள்ளேன். அந்த அனுபவங்கள் என்னை ஆழமாக சிந்திக்க செய்தது. அதனால் எனக்கு பொது வாழ்வில் பதவி மற்றும் அதிகாரத்தை காட்டிலும் சித்தாந்தம், கொள்கை மிகவும் முக்கியம் எனக் கருதுகிறேன். அந்த எண்ணத்துடன் தான் இந்த கட்சியை வழி நடத்துகிறேன்.தேர்தலில் நாம் தனித்து போட்டியிட்டு இருக்க வேண்டும் என்றும், தெலுங்கு தேசம் கட்சி உடன் கூட்டணி வைத்திருக்க கூடாது என்றும் இப்போது நீங்கள் எல்லோரும் கருதலாம். அப்படி நம் கட்சியின் தொண்டர்கள் சொல்வது எனது காதிலும் படுகிறது. நாம் தனித்து போட்டியிட்டு இருக்கலாம். மசூலிப்பட்டினம் கூட்டத்தில் மட்டும் சுமார் 10 லட்சம் பேர் திரண்டார்கள். ஆனால், ஆந்திரா இப்போது எதிர்கொண்டுள்ள சூழல் என்பது மிகவும் இக்கட்டான காலகட்டம். சந்திரபாபு நாயுடு மாதிரியான ஒரு தலைவர் சிறையில் அடைக்கப்பட்டார். அத்தகைய சூழலில் தான் நாம் ஆதரவை தெரிவித்தோம். இது நம் மாநிலத்தின் எதிர்காலம் சார்ந்த முடிவு" என்றார்.



■ தேனி மாவட்டம் வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரை பெருத்திருவிழாவில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் பொதுமக்கள் பார்வைக்காக அமைக்கப்பட்டிருந்த சிறப்பு புகைப்பட கண்காட்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங் நேரில் சென்று பார்வையிட்டார்.

# தேசிய தேர்வு முகமையில் 4 அதிகாரிகள் நியமனம்

புதுடெல்லி:மே,19-

நீட் வினாத்தாள் கசிவு எதிரொலியாக தேசிய தேர்வு முகமையில் (என்டிஏ) புதிதாக 4 மூத்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

கடந்த 2017ம் ஆண்டில் தேசிய தேர்வு முகமை (என்டிஏ) உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு நீட், ஜேஇஇ, கியூட், சிமாட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளை நடத்துகிறது.





மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (யுபிஎஸ்சி) முன்னாள் தலைவர் பிரதீப் குமார் ஜோஷி என்டிஏ தலைவராகவும் மூத்த ஐஏஎஸ் அதிகாரி அபிஷேக் சிங் இயக்குநராகவும் செயல்படுகின்றனர்.

மேலும் 3 ஐஐடி கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள், 2 என்ஐடி கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள், 2 ஐஐஎம்எஸ் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள், ஐஐஎஸ்இஆர் இயக்குநர், ஜேஎன்யூ துணை வேந்தர், இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழக இயக்குநர், நாக் தலைவர், மூத்த உளவியல் டாக்டர் ஆகியோர் என்டிஏவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த சூழலில் கடந்த 3ம் தேதி நடைபெற்ற நீட் நுழைவுத் தேர்வின் வினாத்தாள் கசிந்ததால், தேர்வு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. என்டிஏ அமைப்பில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு வினாத்தாள் கசிவில் தொடர்பு இருக்கும் என்று சந்தேகிக்கப்படுகிறது. இதுதொடர்பாக சிபிஐ அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். வினாத்தாள் கசிவின் எதிரொலியாக என்டிஏ அமைப்பில் புதிதாக 4 மூத்த அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

இதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது. இதன்படி இந்திய வருவாய் துறையின் மூத்த அதிகாரிகள் ருச்சிதா விஜ், ஆகாஷ் ஜெயின், அனுஜா, ஆதித்ய ராஜேந்திர போஜ்காடியா ஆகியோர் என்டிஏ அமைப்பில் புதிதாக இணைந்துள்ளனர். அவர்கள் 5 ஆண்டுகள் என்டிஏவில் முக்கிய பொறுப்புகளில் பணியாற்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

# டெல்லியில் தகிக்கும் வெப்பம் வட இந்தியாவில் வெப்ப அலை தீவிரம் அடைவதாக வானிலை ஆயுவு மையம் தகவல்



புதுடெல்லி:மே,19-

தலைநகர் டெல்லியில் இன்று அதிகபட்சமாக 45 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி உள்ளது. வட இந்தியாவின் சில பகுதிகளில் 48 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகி உள்ளதாகத் தெரிவித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், அடுத்த 5 நாட்களுக்கு வட இந்தியாவில் வெப்ப அலை தீவிரமடையும் என கூறியுள்ளது.கோடை வெயில் நாடு முழுவதும் தீவிரமடைந்துள்ள நிலையில், வட மற்றும் மத்திய இந்தியாவில் கூடுதல் தீவிரத்துடன் உள்ளது. தலைநகர் டெல்லியில் இன்று (மே 18) அதிகபட்ச வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸ் ஆக பதிவாகியது. மகாராஷ்டிராவின் நாக்பூரில் 46 டிகிரி செல்சியஸ் ஆகவும், மத்திய இந்தியாவின் பல பகுதிகளில் 48 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகி உள்ளதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.அடுத்த நான்கு முதல் ஐந்து நாட்களுக்கு வட மற்றும் மத்திய இந்தியாவின் பெரும் பகுதிகளில் வெப்ப அலை தீவிரமடைய வாய்ப்புள்ளதாக எச்சரித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், இதனால், கிழக்கு ராஜஸ்தான் மற்றும் அதை ஒட்டிய மத்திய இந்தியா, உத்தரப் பிரதேசம், ஹரியானா, டெல்லி, பஞ்சாப், கிழக்கு குஜராத், மகாராஷ்டிராவின் சில பகுதிகளில் மக்கள் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என தெரிவித்துள்ளது.

சமீபத்திய இந்த வெப்ப அலை, இந்த பருவத்தில் இதுவரை இல்லாதது என்றும், மிகவும் பரவலான மற்றம் கடுமையான வெப்ப நிகழ்வுகளில் ஒன்று என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வறண்ட காற்றும், தீவிர சூரிய வெப்பமும் இணைந்து உள்நாட்டுப் பகுதிகளில் வெப்ப நிலையை வேகமாக உயர்த்துவதாகத் தெரிவித்துள்ள வானிலை ஆய்வு மையம், இதனால் பிற்பகல் உச்ச வெப்பம் தொடங்குவதற்கு முன்பே பல நகரங்களில் வெப்பநிலை 44 டிகிரி செல்சியஸை தாண்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் மூடிய மழை பரவலாக பெய்யாததும், மேகமூட்டம் இல்லததுமே நிலப்பரப்புகள் வேகமாக வெப்பமடையக் காரணம் என வானிலை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ராஜஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் இருந்து வீசும் வெப்பமான மேற்கு மற்றும் வடமேற்குக் காற்று, நிலைமையை மேலும் மோசமாக்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சமவெளிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸை தாண்டி, இயல்பான அளவைவிட கணிசமாக அதிகமாக இருக்கும்போது அதை இந்திய வானிலை ஆய்வு மையம் வெப்ப அலை என வரையறுக்கிறது. வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸை தாண்டி நீண்ட நேரம் நீடிக்குமானால் அது ஆபத்தானதாக மாறக்கூடும் என்றும் அது எச்சரித்துள்ளது.குறிப்பாக, குழந்தைகள், முதியவர்கள், வெட்டவெளியில் பணியாற்றுபவர்கள் ஆகியோரிடையே நீரிழப்பு, வெப்ப சோர்வு, வெப்பத் தாக்கம் ஆகியவை ஏற்படுவதற்கான வாய்ப்புகளை இது அதிகரிக்கும் என்று சுகாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.தற்போது வட இந்தியாவின் பெரும் பகுதி ஒரு பெரிய வறண்ட வெப்பக் குவி மாடத்தின் கீழ் சிக்கியுள்ளதாகவும், நிலைமை மேலும் மோசமடையக்கூடும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்

# 90ஸ் நினைவுகளில் மூழ்கிய பழைய மாணவர்கள் சந்தோச நாடார் அரசுப் பள்ளியில் கடந்த கால நினைவுகள்



கொம்மடிக்கோட்டை மே 19- தூத்துக்குடி மாவட்டம், கொம்மடிக் கோட்டை சு.சந்தோச நாடார் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியின் பழைய மாணவர் சங்கக் கூடுகை மற்றும் வைர விழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.*பாரம்பரிய உணவுகளுடன் வரவேற்பு:* விழாவில் கலந்துகொண்ட பழைய மாணவர்களுக்கும், முன்னாள் ஆசிரியர்களுக்கும் இளநீர், பனங்கிழங்கு, பதநீர் மற்றும் கரும்புச்சாறு போன்ற பாரம்பரிய உணவுகள் வழங்கி உபசரிக்கப்பட்டன. மேலும் பள்ளி வளாகத்தில் '90ஸ் கிட்ஸ்' காலத்து மிட்டாய்கள் மற்றும் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு அனைவரையும் பழைய நினைவுகளில் மூழ்கடித்தன. குழுப் புகைப்படங்கள் எடுக்கத் தனி வசதிகளும், மதிய உணவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.*வைர விழா மலர் வெளியீடு:*மாலை 6 மணிக்கு நடைபெற்ற வைர விழாவில், தூத்துக்குடி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (CEO) ரா. சங்கீதா சின்னராணி சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, வைர விழா மலரை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். பள்ளியின் தலைமை ஆசிரியை ஆ. ஷிபாஜினி அமுதா வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாகத் தெய்வத்திரு சு.சந்தோச நாடார் அவர்களின் பேரன்கள் சந்தோச பாண்டியன், சிவானந்த பாண்டியன் மற்றும் விவேகானந்த பாண்டியன் ஆகிய மூவர் கலந்து கொண்டனர்.இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் க.முருகானந்தம் மற்றும் சங்க நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செய்திருந்தனர்.



■ தென்காசி மாவட்டம் சிவகிரி வாசுதேவநல்லூரில் செண்பகவல்லி கன்னிமா மதகு உடைப்பினை சரி செய்யக்கோரி மதிமுக சார்பில் தலைவர் வைகோ தலைமையில் ஜூன் 5ஆம் தேதி உண்ணாவிரதம் போராட்டம் நடைபெற இருக்கிறது பல்வேறு பகுதிகளில் ஏராளமானோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள் நிகழ்ச்சி நடைபெறும் வாசுதேவநல்லூர் பயணியர் விடுதி எதிரே உண்ணாவிரதம் நடக்கும் இடத்தினை, கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் Dr.T. சதன் திருமலை குமார் மாவட்ட செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர் கிருஷ்ணகுமார் நகர நகரச் செயலாளர் மாரியப்பன், மாவட்ட துணைச் செயலாளர் கோமதி சுமங்கலிசங்கர, முன்னாள் பேரூர் செயலாளர் பாசறை கணேசன் மற்றும் நிர்வாகிகள் சின்ன கருப்பையா, முருகன், காளி ராஜ், நடுவை முருகன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## கடையநல்லூரில் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்த மதிமுக எம்எல்ஏ. தி.மு.ராசேந்திரன்

கடையநல்லூர் மே,19- தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றுள்ள மதிமுக வேட்பாளர் தி.மு. ராசேந்திரன் எம்.எல்.ஏ நேற்று தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களுக்குத் நேரில் நன்றி தெரிவித்தார். வடக்கு நகர திமுக செயலாளர் அப்பாஸ் தலைமையில், திமுக முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் செல்லத்துரை முன்னிலையில் குமந்தாபுரம், கிருஷ்ணாபுரம், முத்துகிருஷ்ணாபுரம், மாவடிக்கால், ரஹ்மானியாபுரம் ஆகிய பகுதிகளில் இந்த நன்றி அறிவிப்புப் பயணம் எழுச்சியுடன் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தெற்கு நகர பொறுப்பாளர் பீரப்பா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஐவேந்திரன், தினேஷ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் முருகன் மற்றும் மதிமுக மாவட்டச் செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், நகரச் செயலாளர் முருகன், மேலும் கூட்டணி கட்சிகளின் சார்பாகக் கம்யூனிஸ்ட் ராஜசேகரன், தேமுதிக சரவணன், விசிக பாக்கியநாதன், எஸ்டிபிஐ லுக்மான் ஹக்கீம், தமுமுக அப்துல் பாஷித் உள்ளிட்ட பலரும், திமுக வார்டு செயலாளர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் எனப் பெரும் பட்டாளமே திரண்டு வாக்காளர்களுக்கு நன்றி செலுத்தினர்.



■ தென்காசி மாவட்டம் தெற்கு தென்காசி கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட குத்துக்கல்வலசை, அண்ணாநகர், அய்யாபுரம், வேதம்புதூர், அழகப்பபுரம், கே.ஆர். காலனி உள்ளிட்ட பகுதிகளில், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலைக் கதிரவன் தமக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளர் பெருமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். மேலும் பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தும் விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.இந்நிகழ்ச்சியில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் ஒன்றிய செயலாளர் ARM அழகுசுந்தரம், மாவட்ட மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் தமிழக வெற்றிக் கழகத்தின் கொளாநல்லி ஊராட்சி செயலாளர் க.அம்சு சுப்ரமணி தலைமையில், அப்பகுதியில் +2 தேர்வில் சிறந்த மதிப்பெண் எடுத்த மாணவிகள் கனிஷ்கா மற்றும் தேவஸ்ரீ இருவரையும் சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.



## இடையன்குடி கால்டுவெல் பள்ளி சாதனை! +12 பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்று அசுர வளர்ச்சி

இடையன்குடி மே,19- நெல்லை மாவட்டம் இடையன்குடி கால்டுவெல் நூற்றாண்டு நினைவு மேல்நிலைப்பள்ளி, 2025 2026 ஆம் கல்வியாண்டு 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100 சதவீதத் தேர்ச்சி பெற்று மாபெரும் சாதனை படைத்துள்ளது. இப்பள்ளியில் இந்தாண்டு பொதுத்தேர்வு எழுதிய 106 மாணவர்களும் தேர்ச்சி பெற்று பள்ளிக்கு முழுமையான வெற்றியைத் தேடித்தந்துள்ளனர். இதில் மாணவி லி.அதிசய ஜோஸ்லின் 600க்கு 549 மதிப்பெண்கள் பெற்று பள்ளியளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவரைத் தொடர்ந்து மாணவி ஞி.முத்தீஸ்வரி 525 மதிப்பெண்களுடன் இரண்டாமிடத்தையும், மாணவி நி.ஷெரின் ஹேனா 524 மதிப்பெண்களுடன் மூன்றாமிடத்தையும் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர். பள்ளியளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த சாதனை மாணவிகளுக்குப் பள்ளியின் தாளாளர் திரு. சி.ஜேகர் பொன்னாடை அணிவித்து, ரொக்கப் பரிசு (பணப் பரிசு) வழங்கிப் பாராட்டினார். இந்நிகழ்வின் போது பள்ளித் தலைமை ஆசிரியர் (பொறுப்பு) திரு. கி.ஜாண் சாமுவேல், ஆசிரியர்கள் தாம்சன், அருள் பிரபாகர், ஆசிரியைகள் ஜெனிதா, ஷோபா, பள்ளி அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மாணவிகளின் பெற்றோர்கள் திரளாகக் கலந்துகொண்டு வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.



■ திசையன்விளை ஸ்ரீ ராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளி பிளஸ் 2 பொதுத் தேர்வில் இரண்டாம் இடம் பிடித்த மகாதேவன் குளம் வெள்ளை பாண்டி சுதா அவர்கள் புதல்வி மோனிஷாவிற்கு திசையன்விளை கட்டிட பொறியாளர் சங்கத்தின் சார்பாக, கட்டிட பொறியாளர் சங்கத் தலைவர் ஆனந்தராஜ் விஸ்வேஸ்வரா விருது மற்றும் ரூபாய் பத்தாயிரம் ஊக்கத் தொகையாக வழங்கி கௌரவித்தார். அருகில் திசையன்விளை பேரூராட்சி மன்ற கவுன்சிலர் ஆறுமுக தேவி லிங்கராஜ் உடன் இருந்தார்.



■ கடந்த சட்டமன்ற தேர்தலில் சேலம் மேற்கு தொகுதியில் தமிழக வெற்றி கழகம் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற லட்சுமணன் எம்எல்ஏ, ஜங்ஷன் உழவர் சந்தை அருகிலும், வீரபாண்டி தொகுதியில் வெற்றி பெற்ற பழனிவேலு எம்எல்ஏ, கொண்டலாம்பட்டி ரவுண்டானா பகுதியிலும் கட்சி அலுவலகங்களை திறந்து வைத்தனர்.



■ கடந்த சட்டமன்ற தேர்தலில் சேலம் தெற்கு தொகுதியில் தமிழக வெற்றி கழகம் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பார்த்திபன் எம்.எல்.ஏ, பழைய பஸ்நிலையம் போஸ்ட் ஆபீஸ் அருகில் கட்சி அலுவலகம் திறந்து வைத்தார்.



■ புதுச்சேரி மாநில 16வது சட்டப்பேரவையின் தற்காலிக சபாநாயகர் உறுதிமொழி ஏற்பு விழா மக்கள் மாளிகையில் நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் ரி.கைலாஷ்நாதன், அன்பழகன் அவர்களுக்கு உறுதிமொழி செய்து வைத்தார். முதலமைச்சர் ந.ரங்கசாமி, அமைச்சர்கள் ஆ .நமச்சிவாயம், மல்லாடி கிருஷ்ணா ராவ், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர் ரு சரத் சவுகான், அரசு செயலர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் புளியங்குடி சிந்தாமணி பகுதியில், உதவும் அறக்கட்டளையுடன் இணைந்து எல்ஜசி எஸ். கணேஷ் குமார் தனது 60வது பிறந்தநாளை முன்னிட்டு, பொருளாதாரத்தில் நலிவடைந்த 20 குடும்பங்களுக்கு அரிசி மற்றும் காய்கறி உள்ளிட்ட தொகுப்புப் பைகளை வழங்கினார்.



## அம்மா உணவகங்களில் சுவையான, தரமான உணவு வழங்க முதல்வர் விஜய் உத்தரவு

சென்னை:மே 19-

அம்மா உணவகங்களுக்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துமாறும், சமையல் உபகரணங்களை உடனடியாகக் கொள்முதல் செய்யுமாறும், சுவையுடன் கூடிய தரமான உணவு வகைகளை தங்கு தடையின்றி பொதுமக்களுக்கு வழங்கவும் தமிழக முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டில் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 383 அம்மா உணவகங்களும், மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள் மூலமாக 237 அம்மா உணவகங்களும் செயல்பட்டு வருகின்றன.

சமீப காலங்களில் இவ்வுணவகத்தில் அளிக்கப்படும் உணவு வகைகளின் தரம் மற்றும் சுவை திருப்திகரமாக இல்லை என்று முதல்வரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், தமிழக முதல்வர் உரிய அரசுத் துறை செயலாளர்களுடன் கலந்தாலோசித்து, அம்மா உணவகங்களுக்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துமாறும், சமையல் உபகரணங்களை உடனடியாகக் கொள்முதல் செய்யுமாறும், சுவையுடன் கூடிய தரமான உணவு வகைகளை தங்கு தடையின்றி பொதுமக்களுக்கு வழங்கவும் ஆணையிட்டுள்ளார்.

இந்த மறுசீரமைப்பிற்கும், பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் பொது நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள முதல்வர் ஆணையிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000